2015 ஏப்ரல் 1]

118—

புதிய கட்டடம்

***35315—திரு. வீ.பி. நாகைமாலி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்வேளூர் தொகுதி, கீழையூரிலுள்ள உதவித் தொடக்கக் கல்வி அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் தொகுதி, கீழையூரில் உள்ள உதவித் தொடக்கக் கல்வி அலுவலகம், தற்போது கீழையூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இவ்வலுவலகத்திற்குப் புதியதாகச் சொந்தக் கட்டடம் கட்டுவது தொடர்பான கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வீ.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் தொகுதி, கீழையூரில் உள்ள உதவித் தொடக்கக் கல்வி அலுவலகம் மிகவும் பழுதடைந்து இடிந்துவிழும் நிலையில் உள்ளது. இதனால் இந்த அலுவலகம் பக்கத்தில் இருக்கின்ற மேல்நிலைப் பள்ளியில் உள்ள ஒரு வகுப்பறையில் தற்போது இயங்கி வருகின்றது. இந்த உதவித் தொடக்கக் கல்வி அலுவலகத்தின் நிருவாகத்தில் 16 உதவிபெறும் பள்ளிகளும், 41 அரசுப் பள்ளிகளும் உள்ளன. இப்பள்ளிகளில் 252 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். மிகவும் பழுதடைந்துள்ள இந்த*

அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டக் கோரி நாகை மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்மூலம் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு முறையான கருத்துரு அனுப்பப்பட்டு, மூன்று ஆண்டுகள் ஆகின்றன. கட்டடம் கட்டுவதற்கான நிலமும் தேர்வு செய்யப்பட்ட நிலையில் இவ்வளவு காலதாமதம் ஏன் என்று புரியவில்லை. எனவே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் விரைவாக இந்தக் கட்டடத்தினைக் கட்டித் தர நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11-15

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழையூர் ஊராட்சி மன்றத் தலைவரால் உதவித் தொடக்கக் கல்வி அலுவலகம் கட்டுவதற்கு சர்வே எண் 388/17-ல் 62.5 ஏர்ஸ் கிட்டத்தட்ட 66,000 சதுர அடி பரப்பளவுக் கொண்ட அரசு புறம்போக்கு காலி மனை ஒதுக்கீடு செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதனை நாகப்பட்டினம் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலரின் பெயரில் பதிவு மாறுதல் செய்ய மாவட்ட ஆட்சியரின் ஒப்புதல் பெறவேண்டும். தற்போது உதவித் தொடக்கக் கல்வி அலுவலகக் கட்டடம் கட்ட,* Part-II, *பகுதி-2 திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியிலுள்ள, கீழையூர் உதவித் தொடக்கக் கல்வி அலுவலகக் கட்டடம் கட்டிட, மேற்குறிப்பிட்ட காலி மனையினை நாகப்பட்டினம் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலரின் பெயரில் மாவட்ட ஆட்சியர் ஒதுக்கீடு செய்தும், பகுதி-2 திட்டத்தில் தேவையான நிதி ஒதுக்கீடு செய்தும், அவ்வாறு நிதி ஒதுக்கீடு செய்ய இயலாவிடில், சட்டமன்ற அல்லது பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து தேவையான நிதி ஒதுக்கீடு செய்து தரும் பட்சத்தில், கீழையூர் உதவித் தொடக்கக் கல்வி அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் வழிகாட்டுதல்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2015 ஏப்ரல் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வீ.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 3 ஆண்டுகளாகத் தொடர்ந்து நான் இந்த உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் அலுவலகக் கட்டடத்தைக் கட்ட கோரிக்கை வைத்து, முயற்சி எடுத்து வருகின்றேன். அதற்கான நிலமும் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. இப்போது இந்த அலுவலகம் பக்கத்தில் இருக்கின்ற மேல்நிலைப் பள்ளி வகுப்பறையிலே செயல்படுகிறது. ஏற்கெனவே அந்தப் பள்ளி வகுப்பறை இல்லாமல் சிரமப்படுகிறது. இந்த நிலையிலே இந்த அலுவலகமும் அங்கு செயல்படுவதினாலே மிகவும் சிரமமாக இருக்கிறது. ஆகவே இதனைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் அலுவலகத்தை இந்த ஆண்டிலேயே கட்டி முடிப்பதற்கான ஏற்பாட்டினைச் செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொண்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கடந்த 3 ஆண்டுகளாகத் தொடர்ந்து கட்டடம் கட்ட வலியுறுத்தி வருகிறேன் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த வருடம்* Part-II *திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, அதனைக் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 119, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*